12—

## குடமுழுக்கு

*15257— **திருமதி ம. சக்தி:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, நாங்கூர் அருள்மிகு மதங்கீஸ்வரர் மற்றும் நாலாயிரம்பிள்ளையார் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்திட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளும் நாளும் எங்களுக்கு நல்வழி காட்டும் ஒளிவிளக்கு, எங்கள் இல்லத்தின் திருவிளக்கு, தமிழகத்தின் கலங்கரை விளக்கு மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி எனது பதிலுரையை அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*(அ) மற்றும் (ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 5,351 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு நடைபெற்றுள்ளன என்பதனை இங்கே மகிழ்ச்சியுடன் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள திருக்கோயில், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தைச் சார்ந்தது. இத்திருக்கோயிலுக்கு 2013-2014 ஆம் ஆண்டில் கிராமப் புற திருக்கோயில் திருப்பணி நிதி உதவித் திட்டத்தின்மூலம் ரூ.50,000/- ஒதுக்கி, விமானம் அமைப்பதற்கான திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து இதர பணிகளுக்காக சுமார் ஏழு இலட்சத்திற்கான மதிப்பீடு பெறப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, மிக விரைவில் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

2014 டிசம்பர் 4]

முற்பகல் 11-10

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லில் வடித்த தெய்வமும் கருணைபுரிய நாளாகும் என்றே, பொன்னில் வார்த்த உருவமாய், தமிழ் பூமிக்கு வந்த நம் தமிழர்குல சாமியாய், (மேசையைத் தட்டும் ஒலி) ஆலயத்திலும் அடியாருக்கு அன்னமிட்டு மகிழ்கின்ற அன்புருகல் அன்னபூரணி, மக்களின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் தெய்வீகத் திருவடிகளை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாயிரம் ஆண்டுகளில் செய்ய வேண்டிய அறநிலையத் திருப்பணிகள் அனைத்தையும் மூன்றே ஆண்டுகளில் செய்து முடித்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தைப் பூலோக வைகுந்தமாக மாற்றியவர் மக்களின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த வினா அவையில் விவாதத்திற்கு வருவதற்கு முன்பே சீர்காழி தொகுதி, நாங்கூர் ஊராட்சியில் உள்ள நாலாயிரம் பிள்ளையார் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்திட நிதியினை ஒதுக்கிய மக்களின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, சீர்காழி தொகுதி மக்களின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சீர்காழி தொகுதி திருகுருகாவூரில் உள்ள வெள்விடைநாதர் கோயில் பாடல் பெற்ற திருத்தலம் ஆகும். இத்திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்திட மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற திருகுருகாவூர் திருக்கோயில் இந்து சமய

*அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்று 10 ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்ட நிலையில், தற்போது திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உபயதாரர்கள் பங்களிப்பு, பொது மக்கள் நன்கொடை மற்றும் துறையின் நிதியுதவி ஆகியவற்றைக் கொண்டு திருப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மிக விரைவில் இந்தக் கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெறும் என்பதை மீண்டும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தியாவிலேயே தமிழகம்தான் அமைதிப் பூங்காவாகவும், பக்தி நெறியோடும் அம்மாவின் வழிகாட்டுதலோடு இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

**திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்தப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கு, சீர்காழி தொகுதி மக்களின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 600 ஆண்டுகள் பழமைவாய்ந்த விருதுநகர் அருள்மிகு சொக்கநாதர் ஆலயத்திற்கு மக்களின் முதல்வர் அம்மாவின் அரசு, திருத்தேர் செய்து தர முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை தொடர்பாக துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*